بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/02/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 11

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களது நற்குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதாவுக்காக வியாழன் அல்லது சனிக்கிழமை அன்று, ஸில் கஃதாவின் ஆறு நாட்கள் எஞ்சி இருக்கும் தருவாயில் புறப்பட்டார்கள். அச்சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ‘‘யா ரஸூலல்லாஹ் (ஸல்)! என்னிடம் ஓர் ஒட்டகம் இருக்கின்றது. நாம் அதன் மீது நமது பயண பொருட்களை வைத்து விடலாம்’’ என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், அவ்வாறே செய்யுங்கள் என்று கூறினார்கள். வழியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது அடிமையினால் அந்த ஒட்டகம் தொலைந்து விட்டது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த அடிமையை அடிப்பதற்காக எழுந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்தவாறு, இந்த முஹ்ரிமை பாருங்கள்! என்ன செய்ய உள்ளார்? என்று கூறினார்கள். நபித்தோழர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது பயண பொருட்கள் தொலைந்து விட்டது என்று தெரியவந்ததும் அவர்கள் மாவு, பேரீச்சம் பழம் மற்றும் நெய்யால் தயார் செய்யப்பட்ட ஹைஸ் எனும் ஒரு சுவைமிக்க அல்வாவை கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அடிமை மீது கோபப்படுவதிலிருந்து தடுத்து விட்டார்கள். அபூபக்ரே! மென்மையை மேற்கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பிறகு பயணக்குழுவுக்கு பின்னே வந்த ஹஸ்ரத் ஸஃப்வான் பின் முஅத்தல் (ரலி) அவர்கள் வந்தடைந்த போது அவர்களிடம அந்த ஒட்டகம் இருந்தது.

ஹஜ்ஜத்துல் விதாவின் பயணத்திலேயே துல் ஹலீஃபா என்ற இடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு, அவர்களின் மனைவி அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் மூலமாக முஹம்மது பின் அபூபக்ர் எனும் மகன் பிறந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ‘‘அஸ்மா குளித்து விடட்டும். ஹஜ்ஜுக்காக இஹ்ராமை கட்டட்டும். இறை இல்லத்தை வலம் வருவதைத் தவிர ஹாஜிகளை போன்று மற்ற அனைத்து பணிகளையும் செய்யட்டும்’’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அஸ்ஃபான் பள்ளத்தாக்கை கடந்து செல்லும் போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் ஹூது (அலை) மற்றும் ஹஸ்ரத் ஸாலிஹ் (அலை) ஆகியோரது உருவ அடையாளங்களை

எடுத்துரைத்தவாறு, இங்கிருந்து அவர்கள் இருவரும் தக்பீர் கூறிக்கொண்டே இறை இல்லத்தை ஹஜ் செய்ய கடந்து சென்றார்கள் என்று கூறினார்கள்.

ஹஜ்ஜதுல் விதாவின்போது குர்பானி விலங்குகளை வைத்திருந்தவர்களுள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தனது இறுதி நோயின் போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், அவர் மக்களுக்கு தொழ வைக்குமாறு கூறுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது இடத்தில் நின்று கொண்டு தனது உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாது என்று கருதி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தொழுகைக்காக இமாமத் செய்யுமாறு கூறி அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு இவ்விஷயம் பிடிக்கவில்லை. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமே மக்களுக்கு தொழ வைக்குமாறு கூறுங்கள் என்றார்கள். அந்நாட்களிலேயே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தனது நோய் சிறிது குறைந்ததாக எண்ணியவர்களாக மஸ்ஜிதுக்கு தொழ வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொழ வைத்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை கண்டு பின்னே விலகி நின்றார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் சைகையால் அதனை தடுத்தார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு புறத்தில் அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது தொழுகையுடன் தான் தொழுதார்கள். மேலும் மக்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய தொழுகையுடன் தொழுதார்கள்.

ஸஹீஹ் புகாரியில் எடுக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இறந்த தினத்தன்று, அன்னார் (ஸல்) அவர்கள் தனது அறையின் திரையை விலக்கி மக்கள் தொழுவதைப் பார்த்து புன் சிரித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தொழுகைக்காக வெளியே வருகிறார்கள் என்றெண்ணினார்கள். எனவே அவர்கள் பின்பக்கம் விலகி நிற்க முனைந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் சைகையால் அவர்களை தடுத்தார்கள். மேலும், திரையிட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது மரணம் நிகழ்ந்தபோது அச்சமயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவின் அருகில் உள்ள சுஹ் எனும் ஒரு கிராமத்தில் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது மரணத்தின் செய்தி கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும், அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை என்று கூறத் தொடங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது முகத்திலிருந்து துணியை விலக்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு முத்தமிட்டார்கள். என்னுடைய தாய் தந்தையர் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும்! தாங்கள் உயிருடனிருந்த போதும் மரணத்தின் போதும் பரிசுத்தமானவராக உள்ளீர்கள். எனது உயிர் எவன் கைகளில் உள்ளனவா அவன் மீது ஆணையாக! அல்லாஹ் தங்களுக்கு ஒருபோதும் இரு மரணத்தை சுவைக்க விடமாட்டான் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியே வந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நோக்கி, சத்தியம் செய்பவரே! பொறுங்கள்

என்று கூறினார்கள். பிறகு அன்னார் இறைவனை புகழ்ந்து விட்டு, பாருங்கள்! எவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ அவர் கேட்டுக் கொள்ளட்டும்! முஹம்மது (ஸல்) அவர்கள் நிச்சயமாக மரணித்து விட்டார்கள். எவர் அல்லாஹ்வை வணங்கி வந்தாரோ அவர் நினைவில் கொள்ளட்டும்! அல்லாஹ் உயிருள்ளவன் ஆவான். ஒருபோதும் மரணிப்பதில்லை என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அன்னார், اِنَّكَ مَيِّتٌ وَّاِنَّهُمْ مَّيِّتُوْنَ நீங்களும் இறப்பீர்கள்; அவர்களும் இறப்பவர்கள் ஆவர் என்ற வசனத்தை ஓதினார்கள். மேலும்,

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ

அதாவது, **முஹம்மது ஒரு தூதரே அன்றி வேறில்லை. அன்னாருக்கு முன் வந்த அனைத்து தூதர்களும் இறந்து விட்டார்கள்.** அன்னார் இறந்து விட்டாலோ அல்லது கொல்லப்பட்டு விட்டாலோ நீங்கள் உங்கள் குதிகாலில் திரும்பி விடுவீர்களா?..... என்ற வசனத்தையும் ஓதினார்கள். இதைக் கேட்ட மக்கள் தேம்பி தேம்பி அழத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த வசனத்தை மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம்தான் கற்றுக் கொண்டார்கள் என்பதைப் போன்று இருந்தது. பிறகு மக்களில் நான் எவரைப் பார்த்தாலும் அவர் இந்த வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேற்கூறிய இரண்டு வசனங்களை ஓதியதும் சகாபிகளுக்கு உண்மை புலப்பட்டுவிட்டது. அவர்கள் கட்டுக்கடங்காமல் அழுதார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இந்த இரண்டு வசனங்களும் இன்றுதான் இறங்கியது போன்று எனக்கு தோன்றியது. எனது முழங்கால்களுக்கு எனது உடலை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லாமல் போய்விட்டது. எனது பாதங்கள் நடுங்கி விட்டன. மேலும் நான் வேதனையின் உச்சத்தில் பூமியில் விழுந்து விட்டேன் என்று கூறினார்கள்.

**இச்சந்தர்ப்பத்தில் தான் முஸ்லிம்களது முதல் ஒருமைப்பாடு நிகழ்ந்தது. இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** சஹாபிகளின் இந்த ஓர் ஒன்றுகூடல் தான் இருக்கின்றது. ஏனென்றால் அச்சமயம் அனைத்து சஹாபிகளும் இருந்தார்கள். உண்மையில், முஸ்லிம்கள் இவ்வாறு ஒன்று கூடும் அளவுக்கு இவ்வாறான சூழ்நிலை முஸ்லிம்களிடத்தில் முன்னர் ஒருபோதும் வந்திருக்கவில்லை. அந்த ஒன்றுகூடலின் போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதியதும் ஒட்டுமொத்த சஹாபிகளும் அன்னாரது கருத்தை ஒப்புக் கொண்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்விசயத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களது மாபெரும் பேருபகாரம் இந்த சமுதாயத்தின் மீது இருக்கின்றது. அதற்கு நன்றி செலுத்த இயலாது! ஒருவேளை அன்னார் அனைத்து ஸஹாபிகளையும் மஸ்ஜிதுந் நபவியில் ஒன்று கூட்டி, அனைத்து நபிமார்களும் இறந்து விட்டார்கள் என்ற இந்த வசனத்தை ஓதிக்காட்டி இருக்காவிட்டால் இந்த சமுதாயம் அழிந்து விட்டிருந்திருக்கும். ஏனென்றால் அச்சூழ்நிலையில் இக்காலத்து குழப்பம் விளைவிக்கும் ஆலிம்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) உயிருடன் இருக்கிறார்கள் என்று சஹாபிகளும் நம்பி வந்தார்கள் என்று கூறி இருந்திருப்பார்கள். ஆனால் சித்திக்கேஅக்பர் அவர்கள் இந்த புகழுக்குரிய வசனத்தை எடுத்து வைத்ததால்

முந்தைய அனைத்து நபிமார்களும் இறந்து விட்டார்கள் என்ற விஷயத்தில் அனைத்து ஸஹாபிகளின் ஒருமித்த கருத்து ஏற்பட்டுவிட்டது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது கிலாஃபத் தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. கண்ணியத்திற்குரிய சஹாபிகளுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது மரணம் பற்றி தெரியவந்ததும் ஸகீஃபா பனீ ஸாயிதாவில் ஒன்று கூடினார்கள். மேலும் ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களை கிலாஃபத்துக்கு தகுதியானவராக கருதினார்கள். ஒருவேளை முஹாஜிர்கள் அவரிடம் பைஅத் செய்யவில்லை என்றால் என்னவாகும் என்ற கேள்வி எழுந்தபோது, அன்சாரிலிருந்து ஒருவரும் முஹாஜிர்களில் இருந்து ஒருவரும் கலீஃபாவாக இருக்க வேண்டும் என்ற ஆலோசனை வைக்கப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்கள் அதனை பனூ அவ்ஸின் பலவீனம் என்று கூறினார்கள்.

அன்சார், ஸகீஃபா பனீ ஸாயிதாவில் ஒன்று கூடி இருந்த நேரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) மற்றும் இதர பெரும் சஹாபிகள் மஸ்ஜிதுந் நபவியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது பிரிவின் மாபெரும் வரலாற்றைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் இதர அஹ்லே பைத்தை சார்ந்தவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை அடக்கம் செய்யும் ஏற்பாடுகளில் மூழ்கியிருந்தார்கள்.

முஹாஜிர் சஹாபிகளுக்கு அன்ஸாரின் இந்த கூட்டத்தைப் பற்றிய தகவல் கிடைத்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) ஆகியோர் ஸகீஃபா பனூ ஸாயிதாவை அடைந்தார்கள். அங்கு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தெளிவான விரிவான சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் அன்னார், அரேபியர்களது முந்தைய நிலை மற்றும் ஆரம்பகால முஹாஜிர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை உண்மைப்படுத்திய நிலைமையை எடுத்துரைத்தார்கள். பிறகு அன்சார் பெருமக்கள், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது தொடர்பாகவும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு உதவியாளர்களாக ஆனது பற்றியும் மனம் கவரும் விதமாக எடுத்துரைத்தார்கள். பிறகு அன்ஸாரிடம், ஆரம்ப கால முஹாஜிர்களுக்குப் பிறகு என்னைப் பொருத்தவரை உங்களுடைய அந்தஸ்தில் வேறு யாருமில்லை என்று கூறினார்கள். நாங்கள் அமீராக இருப்போம் நீங்கள் மந்திரியாக இருப்பீர்கள். அனைத்து முக்கிய விவகாரங்களில் உங்களிடம் ஆலோசனை பெறப்படும். முக்கிய விவகாரங்களில் உங்களது ஆலோசனையின்றி முடிவு எடுக்க மாட்டோம் என்று கூறினார்கள். அவர்களிடம், உங்களுக்கு தெரியுமா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்; ஒருவேளை மக்கள் ஒரு பள்ளத்தாக்கில் செல்கிறார்கள்; அன்சார் வேறு ஒரு பள்ளத்தாக்கில் செல்கிறார்கள் என்றால் நான் அன்ஸார் செல்லும் பள்ளத்தாக்கில் செல்வேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) கூறியதை எடுத்துரைத்தார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸஅது அவர்களை நோக்கி, ஸஅதே! நீங்கள் அமர்ந்து இருந்தீர்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கிலாஃபத்திற்கு உரிமை உடையவர்கள் குரைஷ் ஆவார்கள் என்று கூறியது உங்களுக்கு தெரியுமல்லவா? என்று கேட்டார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் ஸஅது அவர்கள், தாங்கள் உண்மையை கூறியுள்ளீர்கள்! நாங்கள் மந்திரிகளாக இருப்போம்; நீங்கள் அமீர்களாக இருப்பீர்கள் என்று கூறினார்கள்.

*இந்த குறிப்பு இனிமேலும் தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் உலகின் தற்போதைய ஆபத்தான சூழ்நிலையை குறித்து எடுத்துரைத்து துஆ செய்ய அறிவுறுத்தியவாறு கூறினார்கள்:* **உலகின் சூழ்நிலை மிக அபாயகரமானதாக ஆகிவிட்டது. ஒருவேளை இவ்வாறு சூழ்நிலை வலுக்கும் என்றால், ஒன்றல்ல மாறாக பல நாடுகள் இதில் இணைந்து விடும். பிறகு அதன் அச்சுறுத்தும் முடிவின் தாக்கம் தலைமுறைகள் வரை இருக்கும். இம்மக்கள் இறைவனை அடையாளம் காண்பவர்களாக இறைவன் இவர்களை ஆக்குவானாக! மேலும் தங்களது உலக ஆசைகள் மற்றும் நிம்மதிக்காக மனித உயிர்களுடன் விளையாடாதவர்களாக ஆக்குவானாக. நம்மால் துஆ செய்ய முடியும்; செய்கின்றோம். புரியவைக்க முடியும்; புரிய வைக்கவும் செய்கின்றோம். மேலும் ஒரு நீண்ட காலமாக நாம் இப்பணியைச் செய்து வருகிறோம். இன்றைய நாட்களில் அஹ்மதிகள் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹுத்தஆலா கற்பனையும் செய்து பார்க்கமுடியாத போரின் அழிவுகளிலிருந்து மனிதகுலத்தை காத்தருள்வானாக. ஆமீன்.**

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் அவர்கள் சியேராலியோன் மற்றும் கினி கொனாக்ரியின் முன்னாள் முபல்லிக் மதிப்பிற்குரிய குஷி முஹம்மது ஷாகிர் ஸாஹிப் அவர்களது நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா காயிப் தொழுவதற்கான அறிவிப்பை செய்தார்கள்.* **மர்ஹூம் கடந்த நாட்களில் 69 வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அன்னார் மிக நல்லவரும், எளிய இயல்புடையவரும், துஆ செய்யக் கூடியவரும், வணக்க வழிபாடுகளில் ஈடுபாடுள்ளவரும், உளத்தூய்மை கொண்டவரும், தன்னலமற்றவரும், ஏழைகளை பராமரிக்கக்கூடியவரும், பெரும் வள்ளல் குணம் கொண்டவரும், கிலாஃபத்துடன் அளவு கடந்த நேசம் கொண்டவரும், உணர்ச்சிமிக்க தாயீ இலல்லாஹ்வாகவும் இருந்தார்கள்.**

*ஹுஸூர் அன்வர் அவர்கள் அவரது பாவ மன்னிப்பு மற்றும் அந்தஸ்து உயர்வுக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**